# தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க வேண்டாமென

## அரசு பணிப்பு

(கொழும்பு)

புதிதாக தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க வேண்டாம் என்று கல்வி அமைச்சு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

1989ம் ஆண்டு முதல் 85 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 23 இதழ் 24
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 06 — 03 — 1993

## அமெரிக்க விஸா வழங்குவதில் மாற்றம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் இலங்கையருக்கு 'விஸா' வழங்குவதில் பல மாற்றங்களைச் செய்துள்ளது.

விஸாக்கள் காலாவதி ஆனவர்களும், செல்லுபடியாகக் கூடிய உல்லாசப்பயணிகள் அல்லது வர்த்தக விஸாக்கள் மூலம் கடந்த 24மாதங்களுக்குள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தவர்களும் இனிமேல் புதிய விஸாக்களுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். கடல் நீரேரி பாதை தொடர்பாக புலிகளுடன் மீண்டும் பேச

# ஐ.நா. அதிகாரிகள் யாழ். வருகை

(கொழும்பு)

யாழ். கடல் நீரேரி பாதை திறப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள்குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது. பூநகரி பாதை ஊடாக போக்குவரத்துக்கான பேச்சுவார்த்தைகளை இவர்கள் இன்று அல்லது நாளை விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்வார்கள் எனவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

யாழ் கடல்நீரேரிப் பகுதி பொருள்கள் எடுத்துச் செல்லும் அரசு விதித்திருக்கும் வதில் சிரமம் ஏற்பட்டிருப்பதும் இதன் காரணமாக குடாநாட்டில் பெரும் உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதும் அரசின் கவனத்துக்கு பலதரப்பட்டவர்களாலும் கொண்டுவரப்பட்டது.

தடை காரணமாக யாழ். குடாநாட்டுக்குள் உணவுப்

மேலும் இந்தத்தடை நீடிக்குமானால் யாழ். குடாநாட்டு மக்கள் பட்டினிச் சாவில் தவிக்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் அரசின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை கடல்நீரேரி பகுதி ஊடாக பொதுமக்கள் பயணம் மேற்கொண்டபோது ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதல் காரணமாக 60க்கும் மேற்பட்ட பயணிகள் கொல்லப்பட்டதும் அர

(4-ம் பக்கம் பார்க்க)

இடுவின் கப்பல்

## கப்டன் ஜெயச்சந்திரனுக்கு அமெ. வழக்கறிஞர் ஆஜர்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தளபதி காலஞ்சென்ற கேணல் கிட்டு பயணம்செய்த கப்பலில் வைத்து இந்திய படையால் கைதுசெய்யப்பட்ட கப்பல் கப்டன் ஜெயச்சந்திரன் சார்பில் ஆஜராக அமெரிக்காவின் பிரபல்ய வழக்கறிஞர் ஒருவர் சென்னை வந்துள்ளார்.

மேற்படி வழக்கறிஞரை வ

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னார் காவலரண்களில் தமிழ்க்குழு உறுப்பினர்கள்

(மன்னார்)

மன்னார், தீவிலுள்ள இராணுவ கட்டுப்பாட்டில் இயங்கும் தாழ்வுபாடு- பள்ளிமுனை சாவற்கட்டு சவக்காலைச்சந்தி ஆகிய இடங்களில் இராணுவக் காவலரண்களில் தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து நில்கிரியில் மண்ணெண்ணை வருகிறது

(யாழ்ப்பாணம்)

நில்கிரி கப்பல் இன்று மாலை மண்ணெண்ணையை ஏற்றிக் கொண்டு கொழும்புத்துறை முகத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப்புறப்படவுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிராமசேவையாளர்களாக 101 பேர் நியமிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கிராமசேவையாளர் நேர்முகப்பரீட்சைக்கு 198 பேர் தோற்றினர். இவர்களில் 101 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரின் விபரங்களை வடக்கு கிழக்கு மாகாண சபைக்கணக்காளர் திருகோணமலைக்கு எடுத்துச் செல்வார்.

இவர்களுக்கு மூன்று மாத காலம் பயிற்சியளிக்கப்பட்ட பின்னரே இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் (15)

* தமிழகத்திலிருந்து

## காணாமல்போன விசைப்படகுகள் சிறிலங்கா படையினர் வசம்

(சென்னை)

தமிழ் நாட்டிலிருந்து மீன் பிடிக்கச்சென்று காணாமல் போன விசைப்படகுகளை இறிலங்கா கடற்படையினர் நீருந்து படகுகளாக மாற்றி பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள கடலோரப் பகுதிகளிலிருந்து காணாமல் போன 20க்கு மேற்

4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நாளைமறுதினம் மகளிர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் 8-ந் திகதி திங்கட்கிழமை எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து மாபெரும்மகளிர் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் நடைபெற விருக்கும் இந்த மகளிர் ஆர்ப்பாட்டப் பேரணியில் கடந்த காலங்

4-ம் பக்கம் பார்க்க)

கடுமையாக

## பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் இலவச நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின் காரணமாக இடம்பெயர்ந்தோரில் கடும் பாதிப்புக்குள்ளானோருக்கு மட்டுமே இனிமேல் நான்குவார இலவச உலர்உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்கள் புனர்வாழ்வு அமைச்சினால் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஏனைய இடம்பெயர்ந்தோருக்கு இருவார உலர் உணவு நிவாரணம் மட்டுமே வழங்கப்படும். உலர் உணவு நிவாரண நிறுவோகத்திலுள்ள சீர்கேடுகளை நீக்கும் முகமாகவே

(4-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை சுதந்திரம்வேண்டி தெற்கில் சத்தியாக்கிரஹம்

(கொழும்பு)

இலங்கை சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் எதிர்வரும் 18-ம் திகதி சத்தியாக்கிரஹ போராட்டம் ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக கொழும்பு மாநாடு மண்டபம் விழிப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் யுத்தநிறுத்தம் தற்போது சாத்தியமில்லை!

(கொழும்பு)

தற்போதைக்கு யுத்தநிறுத்தமொன்று ஏற்படக்கூடிய சாத்தியமில்லை என்று இராணுவவட்டாரங்கள் கூறியுள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை சமஷ்டி ஆட்சி முறை மூலம் விடுதலைப்புலிகள் அரசியல் தீர்வு காணவேண்டுமானால் தெரிவுக்குழுவுக்கு தமது யோசனைகள் சமர்ப்பிக்கலாம் என்றும் ஆயுதங்களை பயன்படுத்தப்படமாட்டார்

(4-ம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் காலை 9-00 மணி தொடக்கம் 10-00

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### 5-3-93ல் சனி மாற்றம்

14-3-93இல் செவ்வாய் மாற்றம் 1-6-93 வரை வியாழ வக்கிரம் ரூபா 8-50. எங்கும் விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof. சந்தியதாஸன்.

(கி-7284)

### இசைக்கருவி திருத்துதல்

(Piano Repairs) பியானோ திருத்துதலும் ஓசை சீர் செய்தலும் மற்றும் இசைக்கருவிகளும் திருத்துபவர். தொடர்பு: T. கணேசன் பிரதான வீதி, மானிப்பாய் (அன்னம்மாள் தேவாலயத்திற்கு அருகாமை)

(கி-7292)

### விறகு சிக்கனம்

சமையலுக்குச் சாணவிருட்டி பாவித்து விறகு பாவனையைச் சுருக்குங்கள். மில்க்வைற்

(ஏ-2935)

### கருத்தரங்கு

பாலர் கல்விக் கழகத்தால் நடாத்தப்படும் பாலர் ஆசிரியைக்கான யோகா கருத்தரங்கு நாளை ஞாயிறு காலை 9-00 மணி தொடக்கம் பி. ப. 4-00 மணி வரை யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறும். சேர விரும்பும் மாணவிகள் நேரில் வரவும்.

(கி-7291)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

பிறவுண்கலர் பொமரேனியன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு சனி ஞாயிற்றுக் கிழமைகளில் பார்வையிடலாம் இ சிவசுப்பிரமணியம் மாஸ்டர் பிள்ளையார் கோவிலடி கோப்பாய், வடக்கு கோப்பாய்.

(சி-7295)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தகை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர் சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் கி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(கி-7297)

கிரிக்கெட்

## பல்கலைக்கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அணிக்கும் மானிப்பாய் பரிஷ் அணிக்குமிடையில் நடைபெற்ற 50 ஓவர் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் பல்கலைக்கழக அணி 131 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய பல்கலைக்கழக அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 303 ஓட்டங்களைப் பெற்றது. பி. சயந்தகுமார் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காமல் 107 ஓட்டங்களையும் எஸ். சுதேசன் ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களையும் ரி. திலக்ராஜ் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

மானிப்பாய் பரிஷ் 49 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. (கி)

## இராசி பலன்

**06-03-1993**

சனிக்கிழமை

(தமிழுக்கு மாசி 23)

திரயோதசி மு. இ. 8-42 வரை, ஆயிலியம் மு. இ. 11-28வரை. மரணயோகம் இராகுகாலம் காலை 9-26 முதல் 10-56வரை சுபநேரம் மாலை 3-26 முதல் 4-56 வரை சனிப்பிரதோசவிரதம்.

மேடம்- நம்பிக்கை மேசடிபுத் திதடுமாற்றம், அலைச்சல்.

இடபம்- சுபநிகழ்ச்சி, தொழில் மகிழ்ச்சி, புதிய ஸ்தானம்.

மிதுனம்- வெண்பகை, காரிய தடை, பணக்கஷ்டம்.

கடகம்- அயலவர் உறவு, காரியசித்தி, விருந்துண்ணல்.

சிங்கம்- அடிமை நிலை, மாமியார் துன்பம், மனச்சுமை.

கன்னி: மனச் சந்தோசம், உறவினர் வருகை, புகழ்.

துலாம்: வெளியூர்ச்செய்தி, அதிகாரிகள் பாராட்டு, தெய்வ தரிசனம்.

விருச்சிகம்: உடல் நலக் குறைவு, புத்திரர் கவலை, வெறுப்பு.

தனுசு: மனக் கவலை, கெட்ட மனிதர் உறவால் கேடு, பயம்.

மகரம்: தொழில் சிறப்பு, புதிய நட்பு, கற்பனை மிகுதி.

கும்பம்: நண்பர் உதவி, தொழில் லாபம், பயண நன்மை.

மீனம்: வாய்த் தர்க்கம், கட்டுப்படுதல், பணக் கஷ்டம்.

ஜோதிடர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சகல பீடங்களுக்குமிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்றும் நாளையும் பல்கலைக்கழக புதிய மைதானத்தில் நடைபெறும். இன்று பி. ப. 1 மணிமுதலும் நாளை காலை முதல் மாலை வரையும் நடைபெறும்.

இப்போட்டியின் பிரதம விருந்தினராக கலை பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்கிறார் இம்முறை பல சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (கி)

## மக்கள் அஞ்சலி

(எழுதுமட்டுவாள்)

கிளாலி கடற்பரப்பில் கடந்த 20-ம் தேதி இரவு 12-00 மணி அளவில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த கப்டன் வேந்தன் (ஐயம் பெருமாள் சத்தியசீலன்) என்பவரது புகழுடல் கொடிகாம சந்தையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

(170)

சுதந்திரக்கட்சி

# கூட்டணி அமைத்தால் வழக்கு தொடர முயற்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சிகளோடு இணைந்து கூட்டணி அமைத்தால் அதை எதிர்த்து வழக்குத் தொடர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில பிரிவினர் முயற்சித்துவருகிறார்கள்.

சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் அக்கட்சியிலுள்ள சட்டத்தரணிகளும் ஒன்று கூடி இது குறித்து ஆராய்ந்தனர். (கே)

# சோலைவரி அதிகரிப்பிற்கு பலத்த கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை 1993-ம் ஆண்டிற்கான சோலை வரியைப் பன்மடங்கு அதிகரித்துள்ளதை யாழ்ப்பாண மாநகரசபை வரியிறுப்பாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதற்கான அறிவித்தல் கிடைத்ததும் தமது ஆட்சேபனையை எழுத்து மூலம் மாநகரசபை ஆணையாளருக்குத் தெரிவிக்கவேண்டுமென வும் 1993-ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தவேண்டாமென வரியிறுப்பாளரைக் கேட்டுக்கொள்வதுடன், இது தொடர்பான ஆலோசனைகளை இலவசமாக சங்கத்திடம் பெற்றுக்கொள்ளும்படியும் மேலும் சகல வட்டார ரீதியாகவும் ஆட்சேபனைக் கூட்டங்களை நடத்தப்போவதாகவும் மேற்படி சங்கக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (கி)

## ஆசிரியர்களுக்கு மண்ணெண்ணை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொலைக்கல்வி பாடநெறிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கு குறைந்தவிலையில்தலா இரண்டு லீற்றர் வீதம் மண்ணெண்ணை வழங்கிவருகின்றது. [52]

## கல்விக் கல்லூரி

(கொழும்பு)

வவுனியாவில் கல்விக் கல்லூரி எதிர்வரும் 15-ந் திகதி திறந்துவைக்கப்படும்.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் தேவைக்கென இந்தக் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது.


## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை

ஒப்பந்த அடிப்படையில் முழுநேர உபவிடுதித் தலைவர் பதவிக்கான (ஆணும் பெண்ணும்) விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1993-03-31ம் தேதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

4000/- ரூபா மாதமொன்றுக்கு (நிலையானது) (அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள அதிகரிப்புடன்).

**தகைமைகள்:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி. விடுதிகளை நிர்வகிப்பதிலும் முகாமைசெய்வதிலும், அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:**

நாற்பது ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.

**குறிப்பு:**

பரீட்சை ஒன்றின் மூலமும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமும் தெரிவு நடைபெறும்.

வெற்றிபெறும் விண்ணப்பதாரி நியமிக்கப்படும். கிளிநொச்சியில் / மருதனாமடத்தில் / யாழ்ப்பாணத்தில் உள்ள வதிவுமண்டபத்தில் வசித்தல் வேண்டும். ஆனால் அவரின் குடும்பதுடன் வதிவு மண்டபத்தில் வசிக்க முடியாது. வெற்றிபெறும் அபேட்சகர் மீளளிக்கப்படும் பிணை வைப்பாக ரூபா 10,000/- செலுத்துதல் வேண்டும். இத்தொகை அவரின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் 10 தவணைகளில் கழிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூபா 20/- வீதம் நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். அஞ்சல் மூலம் படிவங்களையும், இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதியாளர் பெயரிற்கு ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை / தபால் கட்டளையையும் 20 x 10 ச. மீ. அளவுடைய சுயமுகவரி இட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், விபரங்கள் தெளிவில்லாமல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-03-03.

(எ-2934)



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் தனியார் காணிகளில் உள்ள கட்டிட இடிபாடுகள் அகற்றப்பட வேண்டுமாயின், மாநகரசபை மராமத்துப்பிரிவுடன் உடன்தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
4-3-1993.

(ஏ-2933)



## அரசினர் போதனா வைத்தியசாலை
### யாழ்ப்பாணம்

வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்கு வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யப்பட்ட நோயாளிகள் தவறாது (07-03-93) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9-00 மணிக்கு எனது காரியாலயத்திற்கு சிபார்சுக் கடிதங்களுடனும், அடையாள அட்டைகளுடனும் வரவும். நோயாளர்களுடன் உதவியாகச் செல்பவர்கள் இருந்தால் அவர்களின் பெயர் விபரம், அடையாள அட்டைகளுடனும் வரவும். இறுதித் தெரிவு ஞாயிறு அன்றே செய்யவிருப்பதால் முழுவிபரங்களுடனும் வரவும். முழுவிபரங்களும் இல்லாதவர்கள் தெரிவு செய்யப்படமாட்டார்கள் என்பதையும் அறியத்தருகிறோம். 08-03-93 திங்கட்கிழமை நோயாளர்கள் எவரும் தெரிவு செய்யப்படமாட்டார்கள் என்பதை அறியத்தருகிறோம்.

பணிப்பாளர்.
வைத்திய கலாநிதி
செல்வி என். கனகரட்டினம்.

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்/05-03-93.

(எ-2936)

# பொலிகண்டி சல்லியம்பதி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான முதலாண்டு மகோற்சவத்தின்

## ★ இரதோற்சவ சிறப்பிதழ் (06-03-1993) ★

ஈழமணித் திருநாட்டின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடகடல் ஓரத்திலே வடமராட்சிப் பிரிவின் சகல சிறப்புக்களும் ஒருங்கே அமைந்து விளங்கும் பொலிகண்டி எனும் பதியில் மனத்தால் சிந்தித்து, வாக்கால் வாழ்த்தி காயத்தால் வழிபட்டு அருள்பெற்று உலகத்திலுள்ள ஆன்மாக்களை உய்யும் பொருட்டு உருவத்திருமேனி தாங்கி பிரணவ சொரூபமாக விளங்கும் "ஆனைமுகத்து அண்ணல்" அருள்மழை பொழியும் பதிதான் ஸ்ரீசல்லி வீரகத்தி விநாயகரின் பதியாகும்.

இவ்வாலயத்திற்கு தென்புறமாக வேண்டுவோர்க்கு வேண்டியவரம் வாரிவழங்கும் கலியுகவரதனாகிய 'கந்தவனக் கடவைக்கந்தவேள்' பெருமான் உறையும் ஸ்தலம் அமைந்திருப்பதும் நறுநீர்க்கேணி அமைந்திருப்பதாலும், மேற்குப்புறமாக காவல் தெய்வமாகிய குளத்தடி வைரவர் அமைந்திருப்பதாலும், நெய்தல் நிலப்பரப்பில் இப்பதி அமைந்திருப்பது இவ்வாலயத்திற்கு மிகப்பெரியதொரு சிறப்பம்சமாகும்.

இற்றைக்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்படி ஆலயம் அமைந்திருக்கும் சல்லியம்பதி என்ற நிலப்பரப்பில் ஓர் முதியவர் நிலத்தைப் பண்படுத்தி தென்னங்கன்றுகள் நாட்டுவதற்காக குழி தோண்டியபொழுது அக்குழியினுள் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட கற்களுக்குள் ஓர் விநாயகர் சிலையும் கண்டெடுக்கப்பட்டது. உடனே அப்பெரியவர் தனது பணியை இடைநிறுத்தி அச்சூழலிலுள்ள மக்களுக்கு இவ்விபரத்தைத் தெரியப்படுத்தினார். மக்களெல்லாம் கூடி ஆர்ப்பரித்தார்கள். பின் வேழமுகத்து விநாயகனுக்கு அவ்விடத்திலேயே ஓர் சிறு கொட்டில் அமைத்து பக்திமார்க்கமாக வழிபாடு ஆற்றத்தொடங்கினார்கள். காலக்கிரமத்தில் விநாயகர் அருள் பெருகி வந்தது. அக்காலகட்டத்தில் சிறு கொட்டிலாக அமைந்திருந்த ஆலயத்தைச் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு ஒருசிறு ஆலயம் அமைத்து கிரியை முறைக்கு அமைய நித்திய பூசைகள் நடைபெறத் தொடங்கின.

இவ்வாலயம் நெய்தல் நிலப்பரப்பில் அமைந்த தன்மையால் (கடலும் கடல் சார்ந்த இடமும்) காலக்கிரமத்தில் சுண்ணாம்புக் கட்டிடம் பழுதடையத் தொடங்கியது. விநாயகரின் திருவருளினால் பொன்னையா என்னும் பெரியவர் கோவிலைக் கட்டுவதற்காக அத்திவாரம் இட்டார். பின் வல்லிபுரம் அருணாசலம் என்னும் பெரியார் இவ்வாலயத்தை சிறந்தமுறையில் வெள்ளை வைரக் கற்கள் கொண்டு அமைக்கமுனைந்தார்.

எம்பெருமானின் திருவருளினால் 1961ம் ஆண்டு ஆலயம் அமைக்கும்பணி ஆரம்பமானது. 963ம் ஆண்டு மூலஸ்தானம், அர்த்த மண்டபம் முதலியவைகள் வெள்ளை வைரக்கற்களால் கட்டப்பட்டு தூபியும் அமைக்கப்பட்டு சைவாகம முறைக்கு அமைய பூரணமான விக்கிரக அமைப்பில்லாத ஓர் உருவத்தை பிரதிட்டை செய்வது முறை



## விநாயகர் அகவலை ஓதி வருவோமேயானால் எமது விக்கினங்கள் எல்லாம் அகன்று போகும்!

யன்று என்ற விதிகளுக்கு அமைய புதிய ஓர் மூலமூர்த்தி அதாவது கருங்கல்லினால் திருவுருவம், அப்பொழுது யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய ஸ்தபதி இராமகிருஷ்ண ஆச்சாரியினால் உருவாக்கப்பட்டது. இவ்விக்கிரகத்தையே 1963ம் ஆண்டு விபவ வருடம் ஆவணி மாதத்தில் அனுவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இத்துடன் ஓர் எழுந்தருளி மூர்த்தியும் அப்போதைய பூசகர் திரு. முத்துக்குமாரஐயரால் உபயமாக வைக்கப்பட்டது. இதிலிருந்து வீரகத்தி விநாயகரின் புதிய சகாப்தம் உருவாகியது.

ஆலயத்தில் அக்கறை கொண்ட அடியார்களின்விடா முயற்சியினால் கடந்த வருடம் (1992ம் ஆண்டு) மாசி மாதம் ஆலய மண்டபத்தில், ஆலயப் பூஜை உரிமையாளர்களும், விழா உபயகாரர்களும், வழிபடும் அடியார்களும் ஒன்றுகூடிக் கலந்துரையாடி இவ்வாலயத்தைப் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்யத் திடசங்கற்பம் பூண்டார்கள்; இதற்கென ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. விநாயகருடைய அருள் மேலோங்கியது. சூறாவளி வேகத்தில் புனரமைப்புப் பணிகள் தொடங்கின. இந்நிலையில் இப்பணிகள் யாவும் திருப்திகரமாக நிறைவேறி 1992ம் ஆண்டு ஆனி மாதம் 4ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று, இறுதி நாள் 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவேறியது. இதன் பின் ஆலயத்தின் தெய்வீகத் தன்மை மிகவும் மேலோங்கிப் பிரகாசிக்கத் தொடங்கியது. திருப்பணிச் சபையினர் ஆலயத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டத் தொடங்கினார்கள். மீண்டும் இவ்வாலயம் தளர்ச்சி அடையாமல் வளர்ச்சி அடையவேண்டும் என்ற காரணத்தினால் ஆலயத்தில் அதிக அக்கறையுடைய மக்கள் யாவரும் ஏற்கக்கூடிய வகையில் ஓர் பரிபாலனத் திட்டத்தை வகுத்தார்கள். இதனால் ஆலயத்தின் நித்திய, நைமித்தியக் கிரியைகள் எதுவிதத் தடையுமின்றி நடக்க வாய்ப்பு ஏற்பட்டது.

இவ்வாலயத்தில் விசேட மாதாந்த, வருடாந்த உற்சவ தினங்களாக தைப்பொங்கல், மகர சங்கிராந்தி உற்சவம், தைப்பூச உற்சவம், மகா சிவராத்திரி, மாசி மாத மகோற்சவம், பங்குனி உத்தரம், புது வருடப் பிறப்பு, ஆனி மணவாளக் கோலம், மாதாந்தச் சதுர்த்தி உற்சவங்கள், நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு, பிள்ளையார் கதை, திருவெம்பாவை முதலிய உற்சவங்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இவ்விநாயகப் பெருமானின் திருவருள் மிகவும் மேலானது. இதற்கு உதாரணமாக தனது தம்பியாகிய கந்தவனக்கடவையில் வாழும் முருகப்பெருமானின் உற்சவத்தின்போது தனது அருகிலே நகர்ந்து வந்த தம்பியின் தேரை தங்கி நிற்கப் பணித்தவர். அதனால் அடியார்கள் வந்து வேண்ட அப்பணியைத் தணித்தவர். இதன் மூலமாக விநாயகப் பெருமானின் திருவருள் எவ்வளவு அற்புதமானவை என்பதை அடியார்கள் என்று கவனிக்கக் கூடியதாகவுள்ளது. இன்றும் கந்தவன ஆலய முருகவேளின் இரதோற்சவத்திலன்று சுவாமி இரதத்திற்கு போவதற்கு முன்பு ஆலய மகோற்சவக் காலக் குருக்களும் ஆலய ஆதீன கர்த்தாவும், அடியார்களும் மங்கள வாத்தியம் முழங்க, சங்கநாதம் ஒலிக்க விநாயகருக்குரிய நிவேத்தியப் பொருட்களுடன் சென்று அவரை அர்ச்சித்து வணங்கி அப்பெருமானின் வேண்டுதலின்பின்பு தான் வன்னி மரத்தால் மகாரதத்துக்கு எழுந்தருளுவார்.

இதற்குச் சான்றாக இவ்விரு ஆலயங்களுக்குமுள்ள ஒற்றுமையை நிலைநாட்ட கந்தவனத்து முருகவேளின் ஆலயத்திலிருந்து பழைய மிகவும் அதி சிறப்புவாய்ந்த "தேவதாரு" கொடிஸ்தம்பத்தை ஆதீனகர்த்தா அவர்கள் மேற்படி விநாயகருடைய ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கி இந்த ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தியுள்ளார். இச்செயல் மூலம் விநாயகர் வேறு, முருகன் வேறு அல்ல என்பதை அடியார்களுக்கு உணர்த்தியுள்ளது. இதுவே திருவருளின் செயலாகும்.

இவ்வாலய விநாயகப்பெருமான் மீது பொலிகண்டி சு. ஆ. கனகசபாபதிதேசிகர் சிறந்த முறையில் திருவூஞ்சற்பா பாடியுள்ளார். கல்லாதவரையும் இப்பா கனிய வைக்கும் சொற்சுவை, பொருட்சுவை மிக்கது.

இவ்வாலய மகோற்சவம் மாசி மகத்தைத் தீர்த்தமாகக் கொண்டு பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறுகின்றது. இதில் எட்டாம்நாள் மிருகயாத்திரைக்காக 'வேட்டை' பொலிகண்டி மாதாங்கோவிலுக்குச் செல்வார். அதன் பின்னர் இரவு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நவீன மின்சப்பறத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிப்பார். ஒன்பதாம் நாள் காலை 11-00 மணியளவில் இரதோற்சவமும், பிற்பகல் 2-00 மணியளவில் இரதா அவரோகணமும், பிராயச்சித்த அபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெறும். பத்தாம் நாள் காலை 9-00 மணியளவில் பொலிகண்டி கந்தவனச் சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம். இதிலும் ஓர் தனிச் சிறப்பு யாதெனில், மாசி மகச் சமுத்திரத் தீர்த்தம் கந்தவனப் பெருமான் பத்திரகாளி அம்பாள் சகிதம் மும்மூர்த்திகளாக சமுத்திரத்தில் தோன்றித் தீர்த்தோற்சவம் நடைபெறும். இக்காட்சி கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். இக்கட்டத்தில் சிவனிடம் மாங்கனி வாங்கிய மூத்தவரும், அக்கனியைப் பெறுவதற்காக மயில் மீது ஏறி உலகெலாம் வலம் வந்த சிவகுமாரனும் சேர்ந்து வருவது மேலும் இவ்வாலயங்களுக்குள் உள்ள ஒற்றுமையை உறுதிப்படுத்துகிறது தாயுடன் இரு மருங்கிலும் இரு குமாரர்களும் சேர்ந்து ஆனந்தசமுத்திரத் திருமஞ்சனமாடி தம்மை மனம், மொழி, மெய்யால் அன்போடு வழிபடும் அடியவர்களுடைய பழவினைகளை ஊடறுத்து மண்ணில் நல்லவண்ணம் வாழ அருள் பாலிப்பார்கள். பதினோராம் நாள் மாலை 6 மணியின் மேல் வசந்தோற்சவம் (பூங்காவனம்) கோலாகலமாக நடைபெறும்.

இவ்வாலயத்தின் வளர்ச்சியில் அரும்பாடுபட்டு இறுதி வரைக்கும் தனது உடல், பொருள், உயிர் போன்ற மூன்றையும் விநாயகருடைய திருவடிக்கே அர்ப்பணித்து அரும்சேவையாற்றும் இவ

(4-ம் பக்கம் பார்க்க)

மலராக்கம்:
சல்லியம்பதி வீரகத்தி விநாயகராலய பரிபாலன சபையினர்.

---

### தவக்கால நற்சிந்தனை

"உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்" (மத்: 5: 44) இந்த மீட்பின் காலத்தை நாம் ஏற்புடையதாக்க வேண்டுமாயின், இறைத்தந்தையை அடைய வேண்டுமாயின் அன்பு முக்கியம். எத்தகைய அன்பு என்பதை இறைமகனே நமக்குக் கூறியுள்ளார். பகைகளையும் அன்பு செய்யுங்கள் என்று கூறியதன் மூலம் அன்பின் அரசர் கிறீஸ்தவத்தின் நோக்கை உணர்த்தியுள்ளார். அன்பு செய்வோம், ஆண்டவனை அடைவோம்.

மோ. தார்சீசியஸ்.

### சொந்த இடங்களுக்கு அரச ஊழியர் இடமாற்றம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றிராத அரசாங்க ஊழியர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-சி)

### எழுத்தறிவு இயக்க மனிதச் சங்கிலிப் போர்

(சென்னை)

கோவை மாவட்டத்தில் நிறைவேற்றபட்டுவரும் முழு எழுத்தறிவு இயக்கத்தை எடுத்துக்காட்டும் வகையில் நேற்று முன்தினம் மாலை கோயம்புத்தூர் நகரில் 60 கிலோ மீட்டர் தொலைவிற்கு மனிதச் சங்கிலி அமைக்கப்பட்டது

நூற்றுக்கணக்கான பள்ளிக் குழந்தைகளும், பல்வேறு தொண்டர் அமைப்புகளின் உறுப்பினர்களும் கைகோர்த்து அமைத்த இந்த மனிதச் சங்கிலி பல தெருக்கள் வழியே சென்றது. (சு-சி)

### மாசிமக தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கிழக்கு கந்தவனக்கடவை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தினதும் மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தினதும் மாசிமக தீர்த்தோற்சவமும் சல்லியம்பதி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவ தீர்த்தோற்சவமும் கந்தவனக்கடவை சமுத்திரத்தில் நாளை 7ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும்.

பொலிகண்டி கிழக்கு சல்லியம்பதி வீரகத்தி விநாயகர் ஆலய பூங்காவனம் 8ந் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும்.

### இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அமரர் குமரையா ஞாபகார்த்தமாக விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் இன்று இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளது.

இன்றைய முதலாட்டத்தில் குருநகர் பாடும் மீன் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை, சென் நீக்கிலஸ் கழகமும், 2வது போட்டியில் அரியாலை ஜக்கிய கழகத்தை எதிர்த்து சென். ஹேக்ஸ் கழகமும் மோதும். இவ் இரு ஆட்டங்களும் அரியாலைகிழக்கு மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (வி)

# ராணுவ பலத்தை அதிகரிக்க படை உயர்பீடம் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் பலத்தை அதிகரிப்பதிலும் பயிற்சி அளிப்பதிலும் இராணுவ உயர்பீடம் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது.

இராணுவத்திலிருந்து தப்பிச் செல்பவர்களால் படையினர் எண்ணிக்கை குறைந்து வருவதுடன் புதியவர்களை சேர்த்துக் கொள்வதிலும் பெரும்பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

எது எப்படியிருந்தபோதிலும் இலங்கை இராணுவத்தைப் பலப்படுத்த வேண்டிய அவசியமும் கட்டாயமும் ஏற்பட்டிருப்பதாக இராணுவ தரப்பில் உணரப்பட்டுள்ளது.

தற்போது இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைப் பாதுகாப்பதற்கே படையில் உள்ளவீரர்கள் போதாமலிருக்கின்றனர்.

இந்நிலையில் படையினர் தொடர்ந்து வெளியேறினால் நிலைமை மோசமாகிவிடும் என உயர்பீடம் கவலை கொண்டிருக்கிறது. இதேவேளை புலிகளின் பிடியிலுள்ள பல பகுதிகளையும் மீட்டெடுப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. (ரி)

---

கிரிக்கெட்

## இந்தியா மீண்டும் வெற்றி

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் - இங்கிலாந்துக்குமிடையில் குவாலியில் நேற்று நடைபெற்ற 6-வது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 48 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 265 ஓட்டங்களைப் பெற்றது. கிக் ஆட்டமிழக்காது 105 ஓட்டங்களையும், ஸ்மித் 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தியா 46.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 267 ஓட்டங்களைப் பெற்றது. கப்டன் அசாருதீன் ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களையும் மஞ்ரேகர் பிரபாகர் 73 ஓட்டங்களையும் எடுத்தனர்.

மேற்படி இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற ஆறு போட்டிகளில் இரு அணிகளும் தலா 3 போட்டிகளில் வெற்றியீட்டின. (வி-இ)

## காண்டீபன் 8 24

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் பிரபல்யமான சென் பற்றிக்ஸ் — சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நேற்று சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்களை எடுத்தது. காண்டீபன் சிறப்பாக பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நேற்றைய ஆட்டம் முடிவடையும்போது சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 26 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்திருந்தது. ஆட்டம் மீண்டும் இன்று காலை 8-30 க்கு ஆரம்பமாகும். (வி)

---

பொலிகண்டி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு கிரியா வித்தகர் கிரியா கலாபமணி அநாகத பூஜா துரந்தரர் சமபத் தொண்டர் ஆகிய மாணிக்கவாசக குருக்கள் ஐயாவின் சேவையை ஆலய பரிபாலன சபையாரும், ஆலய நலன் விரும்பிகளும் போற்றுதார் இல்லை. இவ்வாலயம் இந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் முதலாவது இறைவனின் திருவருள் இரண்டாவது மாணிக்க ஐயா அவர்களின் குருவருளும் சங்கமித்த பிரதிபலிப்பேயாகும் இது ஈன்று வெளிக்கக் கூடியதாகும்.

இந்து மக்களாகிய நாம் அழிவுகளிலிருந்து எம்மை காக்கவேண்டுமானால் விநாயகர் அகவலை ஓதி வருவோமேயானால், எமது விகசினங்கள் எல்லாம் அகன்று போகும்.

---

தொண்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளதினால் தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இனிமேல் ஏற்படமாட்டாது என்று கல்வி அமைச்சு அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

---

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ கல்விமேம்பாட்டுப் பேரவைக் கூட்டம்" நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தமிழீழ கல்விக் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

---

மீட்புநிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மீட்புநிதி செலுத்தத்தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கட்டணச்செலுத்த முடியும் என்பதனை தமிழீழ மீட்பு நிதி பொறுப்பாளர் செ. வெற்றி அரசன் அறிவித்துள்ளார். (ரி)

---

கடுமையான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் உலர் உணவு விநியோகத்தை கட்டுப்படுத்துவதும் இந்நடவடிக்கையின் முக்கிய நோக்கம் எனக் கருதப்படுகிறது. (159-ரி)

---

அரசுபுலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்றும் புலிகள் வற்புறுத்தி அளிப்பதோடு இதர ஜனநாயகக் கட்சிகளின் உரிமைகள் அங்கீகரிக்க அவர்கள் இணங்கினால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்.

எப்படியிருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் உடனடியாகப் பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறமாட்டாது என்று அமைச்சரவை பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (சு-ரி)

---

தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட விசைப்படகுகள் இதுவரையும் கரைக்குத் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசைப்படகுகளை தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட மேற்படி படகுகளின உரிமையாளர்கள் தேடும் முயற்சிகளை அடந்தமாதம் கைவிட்டுள்ளனர்.

இப்படகுகளில் பல தற்போது சிறிலங்கா படையினரால் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

---

## ஹெலியிலிருந்து துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் நேற்று ஹெலிகொப்டரிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன.

வலிமேற்கு, வலி வடக்குப் பகுதிகளில் நேற்றுக்காலை பல தடவைகள் வானில் பறந்து ரோந்து சுற்றிய ஹெலியிலிருந்தே துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. (72)

---

## திவுப்பகுதி ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக வழங்கப்படாதிருந்த திவுப்பகுதி ஓய்வூதியம் கடந்த மாதம் புனர்வாழ்வு புனருத்தாரண அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டது. (159)

---

அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் நேர்முக விசாரணைக்காக காத்திருக்கவேண்டிய அவசியமில்லை.

தற்போது செல்லுபடியாகக் கூடிய அமெரிக்க விசாக்களைப் பெற்றவர்கள் புதிகடவுச்சீட்டுகளுக்கு மாற்ற விரும்புவோரும் நேர்முக விசாரணைகளுக்காகக் காத்திருக்காமல், விண்ணப்பப்படிவங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும் அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திலேயே பெறவேண்டுமென்றும் தூதரகம் அறிவித்துள்ளது. (வி)

---

மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களும் தமிழ் பொலிசாரும் கடமையிலீடுபட்டு வருவதாக மன்னாரிலிருந்துவந்த ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தினருக்கு உதவியாகவே இந்த தமிழ் குழுக்களின் உறுப்பினர்களும் பொலிசாரும் கடமையிலீடுபட்டுள்ளனர். (59)

---

கொழும்பிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை குமாரியிலிருந்து யாழ்முழுவதும் இறக்கி முடிந்த பின்னர் குமணவில் வந்த பொருட்கள் இறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (159)

---

## முன்னாள் அமைச்சர் காலமானார்

(சென்னை)

தமிழக முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் நேற்று திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் காலமானார்.

74 வயதான அன்பில் தர்மலிங்கம், தி. மு. க. ஆட்சியில் பல அமைச்சர் பதவிகளை வகித்தது குறிப்பிடத்தக்கது. (வி)

---

கிட்டுவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல் கப்டன் ஜெயச்சந்திரனின் தாயார் அமெரிக்காவிலிருந்து அழைத்துவந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

---

யாழ் கடல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இந்த நிகழ்வுகள் உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் ஸ்ரீலங்கா அரசுக்கு பல நெருக்கடிகளை ஏற்படுத்தியது.

இதன் காரணமாகவே இப்போது கடல் நீரேரிப் பகுதி தடையை நீக்குவது பற்றியும் விடுதலைப்புலிகளுடன் ஐ. நா. அதிகாரிகள் ஊடாக மீண்டும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவும் ஸ்ரீலங்கா அரசு முடிவுக்கு வரவேண்டியிருந்தது என்றும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்விளைவாகவே ஐ. நா. அதிகாரிகள் குழு புலிகளுடன் பேச யாழ்ப்பாணம் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

---

பத்திரிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணர்வு செய்யும் நடவடிக்கை ஒன்றை எதிர்வரும் 11ம் திகதி நடாத்தவும் மேற்படி சங்கம் திட்டமிட்டுள்ளது.

11ம் திகதி முதல் 18ம் திகதி வரை நாடளாவிய ரீதியில் இந்தப்போராட்டத்தை மேற்கொள்ளவும் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

நாட்டின் பத்திரிகைச்சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து இந்தப் போராட்டம் நடாத்தப்படவிருக்கிறது.

பல அரசியல் எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. (இ)

---

## மதிப்பீட்டு படிவங்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

உலர் உணவு அட்டைக்குப் பதிலாக முத்திரை வழங்கும் திட்டத்திற்கான மதிப்பீட்டுப் படிவங்கள் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு வந்துள்ளன.

இப்படிவங்களின் அடிப்படையில் புதிய மதிப்பீடு ஒன்றும் கிராமசேவகர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமையவே இனிமேல் உலர் உணவு விநியோகம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (159-சி-இ)

---

கொழும்பில்


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற போர்வையில் இராணுவத்தினாலும் பொலிசாராலும் கொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் தாய்மாரும், கணவன்மாரை இழந்த பெண்களும் பேரணியில் கலந்துகொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் 8-ந் திகதி திங்கட்கிழமை ஆளும்கட்சியும் மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் கூட்டங்களை நடாத்தத் திட்டமிட்டுள்ளதால் அன்றைய தினம் கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய இருப்பதாக பொலிஸ் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (வி)

---

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னம்மா பொன்னுத்துரை

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அன்னம்மா பொன்னுத்துரை காலமானார்.

இவர் காலம் சென்ற திரு. எஸ் பொன்னுத்துரையின் (மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும், திரு. பொ. நாராயணலிங்கம் (இளைப்பாறிய P.W.D. ஓவசியர், யாழ். கண்ணாடி நிலையம், எக்ஸ்போ பேணிச்சர்ஸ்), திரு. நவசுந்தரலிங்கம் (மலாயா), திருமதி மகாயோகேஸ்வரி, சிவஞானம் (பரணி பார்மசி), திருமதி பரமேஸ்வரி சதாசிவம் (Ret. Post-master), திருமதி இரஜேஸ்வரி கனகரட்ணம் (இளைப்பாறிய விவசாயா இலாகா கணக்காய்வாளர்), திரு. உருத்திரசிங்கம் (லண்டன்), திரு. சோமசூரியசிங்கம் (சிங்கம் பார்மசி), காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி பரமேஸ்வரன், திரு. சந்திரானந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற திரு. சண்முகம்பிள்ளை, திருமதி மகேஸ்வரி ராஜதுரையின் அன்பு அம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் "சிங்கம்ஸ் இல்லம்" ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் மேற்கு இல்லத்தில் இருந்து தனக்கிளியைக்காக தாவடி மயானத்துக்கு இன்று (6-3-93) சனிக்கிழமை காலை 11 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பொ. சோமசூரியசிங்கம்
[சிங்கம்ஸ் பார்மசி]

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(சி-7298)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி மேற்கு வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Srilanka under licence Number B/10336/B